# கிறிஸ்தவர்களின் பழைய ஏற்பாட்டுப் பயன்பாடு

ஹியுகோ மெக்கோர்ட்

*இவ்விதம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாய் இருந்தது (கலா. 3:24).*

ஒரு மரத்திற்கு அதன் வேர்க்குழாய்களின் முக்கியத்துவமே கிறிஸ்தவத்திற்குப் பழைய ஏற்பாட்டின் முக்கியத்துவமாக உள்ளது. இயேசுவும் மற்றும் புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர் ஒவ்வொருவரும் பழைய ஏற்பாட்டைப் பயன்படுத்தியுள்ளனர். இன்றைய நாட்களில் நன்கு தகவல் அறிந்த ஒவ்வொரு கிறிஸ்தவரும் பழைய ஏற்பாட்டைப் பயன்படுத்த வேண்டிய ஆறு வழிமுறைகளை நாம் காண்போம்.

## தொடக்கங்களை ஆராய்தல்

புதிய ஏற்பாடானது “படைப்பின் தொடக்கத்திற்கு” (மாற். 10:6) பழைய ஏற்பாட்டைச் சுட்டிக்காட்டுகின்றது. அது போலவே, மனிதனின் தொடக்கம் பற்றிய கேள்விகள் பழைய ஏற்பாட்டில் பதில் அளிக்கப் படுகின்றன: “ஆதியிலே மனுஷனை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதை ... நீங்கள் வாசிக்கவில்லையா?” (மத். 19:4, 5). புதிய ஏற்பாடானது “முதல் மனிதனாகிய ஆதாமைப்” பற்றி விவாதிக்கின்ற பொழுது (1 கொரி. 15:45) பழைய ஏற்பாட்டைக் குறிப்பிடுகின்றது. தொடக்கங்கள் குறித்துக் கேள்வி கேட்கின்றவரிடத்தில், ஒரு கிறிஸ்தவர் இயேசுவும் பவுலும் செய்தது போலவே ஆதியாகமம் புத்தகத்தின் விபரங்களைக் குறிப்பிட முடியும்.

## இயேசுவின் தெய்வீகத்தை நிரூபித்தல்

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களை ஒருவர் படிப்பதினால் இயேசு தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்பதை அவர் நிச்சயப் படுத்திக் கொள்ளலாம். நாசரேத்தூர் இயேசுவே கிறிஸ்துவாக இருந்தார் மற்றும் இருக்கின்றார், அவர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்றுள்ள ஒரு சிந்தனையில் காரண அறிவின் பல வரிசைகள் முற்றுப் பெறச் செய்யப்படுகின்றன. குறிப்பிடத் தக்க அவரது போதனைகள்

(யோவா. 7:46), அவரது பாவமற்ற தன்மை (யோவா. 8:46), அவரது அற்புதங்கள் (யோவா. 10:25), அவரது செல்வாக்கு (அப். 4:13), மற்றும் அவரது தியாகம் நிறைந்த அன்பு (யோவா. 10:11) ஆகியவை இதில் உள்ளன. இருப்பினும், பழைய ஏற்பாட்டில் காணப்பட்டுள்ள ஆதாரமே புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களுக்கு மிகவும் அடிக்கடி வேண்டுகோளாக விடப்படுகின்றது.

பெந்தெகொஸ்தே நாளன்று பேதுருவின் பிரசங்கமானது ஒரு உண்மையைச் சுட்டிக்காட்டியது: இயேசு "ஆண்டவராகவும் கிறிஸ்து வாகவும்" இருக்கின்றார் (அப். 2:36ஆ). இந்த உண்மைக்கான தமது ஆதாரங் களில் பெரும்பாலானவற்றைப் பேதுரு, யோவேல் மற்றும் சங்கீதங்கள் ஆகிய புத்தகங்களில் இருந்து எடுத்துக் காட்டினார். பேதுரு, சாலொமோன் மண்டபத்தில் தம்முடைய பிரசங்கத்தில், "கிறிஸ்து பாடுபட வேண்டு மென்று தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் முன்னறிவித்தவைகளை இவ்விதமாய் நிறைவேற்றினார் ..." (அப். 3:18-21) என்று உறுதிப்படுத்தினார். ஆவியானவர் தந்தருளின வரத்தின்படியே பேதுரு பிரசங்கித்ததினால் (அப். 2:4), அவரது பழைய ஏற்பாட்டின் பயன்பாடானது தேவன் விரும்பியிருந்த வகையிலேயே மிகச் சரியாக இருந்திருக்க வேண்டும்.

அது போலவே, ஆவியானவரால் பேசிய (அப். 6:10) ஸ்தேவான், கிறிஸ்துவின் தெய்வீகத்துவம் பற்றிப் பிரசங்கித்ததில், ஆதியாகமம், யாத்திராகமம், உபாகமம், யோசுவா, ஆமோஸ் மற்றும் ஏசாயா ஆகிய நூல்களில் உள்ளவற்றைக் குறிப்பிட்டார். எத்தியோப்பிய மந்திரிக்கு இயேசுவைக் குறித்துப் பிரசங்கிப்பதற்குப் பிலிப்பு பழைய ஏற்பாட்டின் வசனப் பகுதியொன்றைப் பயன்படுத்தினார் (அப். 8:26-38). புறஜாதி யாரான கொர்நேலியுவுக்குப் பேதுரு இயேசுவைப் பற்றி, ''அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகள் எல்லாரும் அவரைக் குறித்தே சாட்சி கொடுக்கின்றார்கள்'' என்று உறுதிப்படுத்தினார் (அப். 10:43).

அந்தியோகியாவில் பவுல் ஒரு பிரசங்கத்தில், பஞ்சாகமம், யோசுவா, சாமுவேலின் புத்தகங்கள், சங்கீதங்களின் புத்தகம், ஆபகூக், ஏசாயா ஆகிய புத்தகங்களில் இருந்து நேரடியான குறிப்புகளை ஏற்படுத்தினார். அத்துடன் கூடுதலாக, "தீர்க்கதரிசிகளின் வாக்கியங்கள்" யாவும் இயேசு சிலுவையில் அறையப்பட்ட பொழுது நிறைவேற்றப்பட்டதாக அவர் சுட்டிக் காண்பித்தார் (அப். 13:27).

கிறிஸ்து பாடுபட்டு மரித்தோரிலிருந்து எழ வேண்டும் என முன்னு ரைக்கப்பட்டிருந்ததைப் பழைய ஏற்பாட்டிலிருந்து மெய்ப்பிப்பதென்பது பவுல் மற்றும் புதிய ஏற்பாட்டின் எல்லாப் பிரசங்கியார்களின் வழக்கமான நடைமுறையாய் இருந்தது என்பது உறுதியானதாகும் (அப். 17:3ஐக் காணவும்). பழைய ஏற்பாட்டின் இந்த ஏற்புடைய மற்றும் ஒருவேளை, மிக முக்கியமான பயன்பாடானது லூக். 24:27ல் இயேசுவாலேயே பயன் படுத்தப்பட்டது.

## அடையாளங்களைப் புரிந்து கொள்ளுதல்

இயேசுவைப் பற்றிய தீர்க்கதரிசனங்களுடன் கூட, அவர் பழைய ஏற்பாட்டில் மாதிரிகள், அடையாளங்கள் அல்லது நிழல்களின் வழி முறைகளினாலும் முன் வைக்கப்படுகின்றார். போக்காடு, பஸ்கா ஆட்டுக் குட்டி, பிரதான ஆசாரியர், ஆலயத் திரைச் சீலை, மன்னா அல்லது வெண் கலச் சர்ப்பம் ஆகியவற்றைப் பற்றி ஒரு கிறிஸ்தவர் படிக்கின்ற பொழுது, கிறிஸ்து (அவற்றில்) சித்தரிக்கப்படுவதை அவர் காண்கின்றார். ஆதாம், மெல்கிசேதேக்கு, மோசே, தாவீது மற்றும் யோனா ஆகியோரிலும் கிறிஸ்து சித்தரிக்கப்படுவதை அவர் காண்கின்றார். நோவா மற்றும் வெள்ளப் பெருக்கின் வரலாறானது ஞானஸ்நானத்தின் ஒரு வகை என்று அவர் உணருகின்றார் (1 பேது. 3:20, 21). அவர், ஆகார் மற்றும் சாராள் ஆகியோரின் வரலாற்றை வாசிக்கின்ற பொழுது, பழைய மற்றும் புதிய உடன்படிக்கைகளின் ஒப்புவமையொன்றைக் காண்கின்றார் (கலா. 4:21-31).

செங்கடலை எபிரெயர்கள் கடந்து சென்றதில் அவர் ஒரு பாவியின் ஞானஸ்நானத்தைக் காண்கின்றார்; வனாந்திர யாத்திரையில் சபை உதாரணப் படுத்தப்படுவதை அவர் காண்கின்றார்; மற்றும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டில் அவர் பரலோகத்தின் முன் சுவையைக் காண்கின்றார். ஆசரிப்புக் கூடாரத்தில் அவர் புதிய ஏற்பாட்டு சபையின் சித்தரிப்பு ஒன்றைக் காண்கின்றார்; மற்றும் ஆசாரியத்துவத்தில் அவர் கிறிஸ்தவத்தின் நிழலைக் காண்கின்றார். பழைய ஏற்பாட்டு விருத்த சேதனத்தில் அவர் பாவத்தை ஒருவருடைய வாழ்விலிருந்து சுவிசேஷமானது அகற்றிப் போடும் ஒரு மாதிரியைக் காண்கின்றார்.

## உடன்படிக்கைகளை ஒப்பிடுதல்

பழைய மற்றும் புதிய உடன்படிக்கைகளில் ஒரே விதமான கொள்கைகள் போதிக்கப்படுகின்றன. மனிதன் அப்பத்தினால் மாத்திரமல்ல, ஆனால் தேவனுடைய வார்த்தையினாலும் பிழைக்கின்றான் என்ற சத்தியமானது இயேசுவினால் தெளிவாகப் போதிக்கப்பட்டது போலவே மோசேயினாலும் போதிக்கப்பட்டது (உபா. 8:3; மத். 4:4). மனிதன் தேவனைச் சோதிக்கக் கூடாது (மத். 4:7) என்பது பழைய ஏற்பாட்டில் முதலாவது எழுதப்பட்ட வேளையில் (உபா. 6:16) இருந்ததைக் காட்டிலும் இப்பொழுது குறைவான உண்மையாக இருப்பதில்லை. மனிதன் உண்மையான ஒரே தேவனை மட்டும் ஆராதிக்க வேண்டும் - அவரே எப்பொழுதும் உண்மையாக இருந்துள்ளார் மற்றும் இனி எப்பொழுதும் அவ்வாறே இருப்பார் (உபா. 6:13; மத். 4:10). இரண்டு உடன்படிக்கைகளின் கீழும் புறம்பான உதடுகளினால் (மட்டும்) செய்யும் ஆராதனை தவறானதாக உள்ளது (ஏசா. 29:13; மாற். 7:6). ஒவ்வொரு உடன்படிக்கையின் கீழாகவும் கீழ்ப்படிவதற்கான கட்டளைகள் எழுதப்பட்டன (பிர. 12:13, 14; யோவா. 15:10). ஒவ்வொன்றின் கீழாகவும் தேவனுடைய செய்தியானது போதனையினால் அளிக்கப்பட்டது (ஏசா. 54:13; யோவா. 6:45). பழைய நியாயப்பிரமாணத்தின் இரண்டு பெரிய கட்டளைகள் (உபா. 6:5;

*லேவி. 19:18) கிறிஸ்துவின் கீழும் இரண்டு பெரிய கட்டளைகளாகவே நிலைத்திருக் கின்றன (மத். 22:37-39).*

*புதிய ஏற்பாட்டு நடக்கையில் சில திறவுகோல் உபதேசங்கள் பழைய ஏற்பாட்டு வசனப்பகுதிகளினால் உயர்த்திப் பிடிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, உபாகமம் 25:4ஐ மேற்கோள் காட்டி சுவிசேஷப் பிரசங்கியார்களுக்கு உதவியளிக்கும்படிப் பவுல் வேண்டுகோள் விடுக்கின்றார் (1 கொரி. 9:9; 1 தீமோ. 5:18). நீதியான வாழ்வின் முக்கியத் துவத்தைக் காண்பிக்க (ரோமர் 13:8-10) அவர் பத்துக் கட்டளைகளில் இருந்து மேற்கோள் காட்டினார். ஆண்களின் தலைமைத்துவத்திற்கு பெண்கள் கீழ்ப்படிய வேண்டும் என்று வேண்டுகோள் விடுப்பதற்கு (1 கொரி. 14:34; ஆதி. 3:16ஐக் காணவும்) அவர் பழைய ஏற்பாட்டைக் குறிப்பிட்டார். யாக்கோபும் கூட, பட்சபாதம் காட்டும் செயலுக்கு எதிராகப் போதிக்கப் பத்துக் கட்டளைகளின் மீது சாய்ந்தார் (யாக். 2:8-11).*

## உடன்படிக்கைகளை வேறுபடுத்தி ஒப்பிடுதல்

*தேவனுடைய இராஜ்யத்தின் கொள்கைகள், ஒன்றுமற்றதாக்கப்பட்ட பழைய ஏற்பாட்டுக் கட்டளைகளுக்கு எதிராக வேறுபடுத்தி ஒப்பிடுவதில் மிகச் சிறப்பாகக் காணப்படுகின்றன. இயேசு தம்முடைய பின்பற்றாளர் களுக்கு, பழைய ஏற்பாட்டிலிருந்து சுட்டிக்காட்டிய மேற்கோளுடன் "ஆனால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்பதையும் கூட்டிக் கூறினார் (மத். 5:21, 22). பழைய ஏற்பாட்டு விருத்தசேதனம் மற்றும் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாகுதலின் இருதய விருத்தசேதனம் (யோசு. 5:2; கலா. 6:15) ஆகியவற்றிற்கிடையிலுள்ள வேறுபாட்டு ஒப்பீட்டைப் பவுல் வலியுறுத்தினார்.*

*பழைய (ஏற்பாட்டில் உள்ள) இறந்த மிருகங்களின் பலிகளுக்கு எதிராக நாம் புதிய (ஏற்பாட்டில்) உயிருள்ள மனித பலிகளைக் காண்கின்றோம் (லேவி. 1:3; ரோமர் 12:1), மற்றும் பூமிக்குரிய எருசலேமானது ஆவிக்குரிய சீயோனுடன் நேரெதிர்ப்படுவதையும் (1 இரா. 9:3; கலா. 4:26) நாம் காண்கின்றோம். முந்திய பிரமாணமானது கற்பலகைகளில் எழுதப்பட்டது ஆனால் பிந்தியது இருதயங்களில் எழுதப்பட்டுள்ளது (2 கொரி. 3:3).*

## எடுத்துக்காட்டுகளில் இருந்து கற்றுக் கொள்ளுதல்

*தேவனிடத்தில் (நாம்) உண்மை நிறைதன்மையுடன் இருப்பதற்குப் பழைய ஏற்பாட்டுச் சித்தரிப்புகள் ஏராளமான எடுத்துக்காட்டுகளை அளிக்கின்றன (எபி. 12:1). அது போலவே, அவை உண்மைத் தன்மையற்ற நிலையின் விளைவுகளையும் செயல் விளக்கப்படுத்துகின்றன. இயேசு, எலியா மற்றும் ஒரு விதவையையும், எலிசா மற்றும் நாகமானையும் (லூக். 4:25-27) குறிப்பிடுவதற்குக் காரணங்களைக் கண்டார். அவர் தம்முடைய பிரசங்கங்களை, நோவா (மத். 24:37), யோனா (மத். 12:41), சாலொமோன் (மத். 12:42), மற்றும் லோத்தும் அவருடைய மனைவியும்*

(லூக். 17:29, 32) ஆகியோரைக் குறிப்பிடுவதினால் விளக்கப்படுத்தினார்.

இஸ்ரவேலர்களின் நடுவில் இருந்த கீழ்ப்படியாமையின் உதாரணங்களினால் கிறிஸ்தவர்கள் உதவி பெறக் கூடும் என்று பவுல் நம்பினார் (1 கொரி. 10:1-12). பழைய ஏற்பாட்டின் ஆதார மூலங்கள் யாவும் பயன்படுத்த முடியாதபடிக்கு அவை அவ்வளவு ஏராளமாக இருப்பதாக எபிரெய நிருபத்தின் எழுத்தாளர் கண்ணோக்கினார்: "... கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாமுவேல் என்பவர்களையும், தீர்க்கதரிசிகளையும் குறித்து நான் விவரஞ் சொல்ல வேண்டுமானால் காலம் போதாது" (எபி. 11:32).

## முடிவுரை

பழைய ஏற்பாட்டின் தவறான பயன்பாடுகள் இருந்தாலும் கூட, ஆத்துமாக்களின் இரட்சிப்புக்கென்று அது ஆதாயம் நிறைந்த மற்றும் ஏற்புடைய விதத்தில் பயன்படுத்தப்பட முடியும். அது உலகமும் மனித இனமும் எப்படி இருக்க வந்தது என்று காண்பிக்கின்றது, மற்றும் அது நாசரேத்தூர் இயேசுவைத் தேவனுடைய குமாரனாகச் செயல் விளக்கப்படுத்துகின்றது. நாம் பழைய ஏற்பாட்டில் கிறிஸ்தவத்தின் நிழல்களைக் காண்கின்றோம். நாம் வாழ வேண்டிய அதே கொள்கைகளை அது மறுவலியூட்டுகையில், சுயாதீனப் பிரமாணத்தின் அழகை வலியுறுத்தும் முற்றான நேரெதிர்க் கொள்கைகளையும் அது கொண்டுள்ளது. கடைசியாக, மக்கள் இன்றைய நாட்களில் தேவனுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வதற்கு அது தெளிவான முன்மாதிரிகளை அளிக்கின்றது.

தழுவப்பட்டது.